**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

**O.S.No.31/2020**

2024 ம் ஆண்டு நவம்பர் மாதம் 12 -ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி. A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதி கூறப்படுகிறது.

**நாள் : 12.11.2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சண்முகசுந்தரம் | ஜாதி | : | |
| த/பெயர் | : | கலியபெருமாள் | மதம் | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

**வா.சா.1 முன்னிலை பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) என் அப்பாவிற்கும் பிரதிவாதி கலாவின் மாமனாரும் உடன்பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். தாவா புல எண்ணில் ஏற்கனவே கலாவின் கணவருக்கு என் தகப்பனாரால் 1 ஏக்கர் நிலம் பதிவு செய்து கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்தான புல எண்.176/3 உள்ள 44 சென்ட் நிலத்தை என் தகப்பனார் உயிருடன் இருக்கும் காலத்திலேயே வாய்மொழியாக பிரதிவாதியின் கணவருக்கு கொடுத்துவிட்டார் என்றால சரியல்ல.

2) என் அப்பா இருக்கும்போது கிரையம் சாசனம் செய்து கொள்ள பிரதிவாதியின் கணவர் முயற்சி செய்தார் என்றாம், அதற்குள்ளாக என் தகப்பனார் இறந்துவிட்டதால் என் தகப்பானரால் எழுதி கொடுக்கப்பட்ட கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் கிரைய சாசனம் செய்ய முடியவில்லை என்றால் சரியல்ல. வாய்மொழியாக கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டதை அடிப்படையாக கொண்டு வாதியின் கணவர் உயிருடன் இருந்த காலத்திலும், அதற்கு பின்னிட்டும் 3ம் நபர்களுக்கு பிரதிவாதி குடும்பத்தாரால் குத்தகை சாகுபடி செய்துக்கொள்ள கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

3) என் தகப்பனார் இறப்பதற்கு முன்னதாக பிரதிவாதியின் கணவர் இறந்துவிட்டார். என் அப்பாவிடமிருந்து வாய்மொழியாக கிரைய பெற்ற சொத்தை என் தகப்பனார் இறந்துவிட்டதால் தாவா சொத்திலுள்ள 44 சென்டை கிரைய சாசனம்

செய்துக்கொள்ள இயலாமல் போய்விட்டது என்றாலும், தற்போது வரை பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. என் அப்பா இருக்கும் காலத்திலேயே

பிரதிவாதி குடும்பத்தில் தாவா சொத்து ஒப்படைக்கப்பட்டதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் பிரதிவாதி கலா தாவா சொத்தின் அனுபவத்தில் இருந்துக்கொண்டு, தாவா சொத்தை பஞ்சாயத்து தலைவர் ஜீவானந்தம் என்பவருக்கு குத்தகைக்கு கொடுத்து அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல.

4) அதன்பிறகு மேலநத்தத்தை சேர்ந்தே ராஜேந்திரன் என்பவர் கடந்த 2019 ஆம் ஆண்டு முதல் 10.05.2023 ஆம் தேதி வரை அனுபவ சாகுபடி செய்து வந்து அதற்கு பின்னிட்டு, பிரதிவாதி குத்தகையை மீட்டு பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. தாவா சொத்து நாளது தேதிவரை பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றாலும், பிரதிவாதி நேரடையாகவும், 3 ம் நபர்களுக்கு குத்தகைக்கு விட்டு சாகுபடி செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து என் அனுபவத்தில் இருந்து வருகிறது என்பதை காட்டக்கூடிய ஆவணங்கள் ஏதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

5) பிரதிவாதி தாவா சொத்தில் அனுபவத்தில் இருந்து வருவதை மறைத்து கடந்த 25.05.2020 ஆம் தேதி பிரச்சனை செய்தார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திலுள்ள 44 சென்டை நான் தனித்து அனுபவித்து வருவதை காட்டக்கூடிய ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். நான் தாவா சொத்தில் சாகுபடி செய்யவில்லை என்றால் சரிதான். கடந்த 3-4 வருடங்களாக நான் தாவா சொத்தில் சாகுபடி செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் வழக்கு தாக்கல் செய்வதற்கும் முன்பும், அதற்கு பின்னிட்டும் எந்த காலத்திலும் நான் தாவா சொத்தில் சாகுபடி செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிக்கு எதிராக பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
DN: cn=A SEETHALAKSHMI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2024.11.15 10:43:43 +0530

District Munsif

Mannargudi.